பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 11 2024 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பிஜேபி-யின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அமித் ஷா மும்பையில் இன்று வெளியிட்டார்.

2. காற்று மாசுவை கட்டுப்படுத்துவதில் மின்சார வாகனங்களின் பயன்பாடு முக்கிய பங்காற்றுவதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தை சேர்ந்த 23 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

4. மொரிஷியஸ் நாடாளுமன்றத் தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.

5. **New South Wales** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் சாம்பியன் பட்டம் வென்றார்.

*----- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<>>>>>**

மகாராஷ்ட்ரா மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான தொடர் நடவடிக்கைகளை பிஜேபி மேற்கொள்ளும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பிஜேபி-யின் தேர்தல் அறிக்கையை மும்பையில் இன்று அவர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், அம்மாநில மக்களின் விருப்பங்களை இந்த தேர்தல் அறிக்கை பிரதிபலிப்பதாக உள்ளது என்று கூறினார்.

வரும் 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை உலக அளவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்க செய்ய வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான வாக்குறுதிகளை அளிக்க எதிர்க்கட்சிகள் தயங்குவதாக அவர் குறை கூறினார்.

இமாச்சலப்பிரதேசம், தெலங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை காங்கிரஸ் நிறைவேற்றவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை மும்பையில் இன்று வெளியிடுகிறார்.

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக இம்மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை இம்மாதம் 23-ஆம் தேதி நடைபெறும்.

<<<<<<>>>>>

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான, திரு. நரேந்திர மோடி, இரண்டு தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு. ஹேமந்த் சோரன், ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சியின் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், ஆகியோரும் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

காற்று மாசுவை கட்டுப்படுத்துவதில் மின்சார வாகனங்களின் பயன்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், மின்சார வாகனங்களின் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மின்சார வாகனங்களின் சேவை என்ற திட்டம் தில்லியில் காற்று மாசுவின் அளவை குறைப்பதற்கு உதவிடும் என்று கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, கட்டுமானத் தொழில் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் மூலம் ஏற்படும் மாசுவை குறைக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தை சேர்ந்த 23 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமேஸ்வரத்திலிருந்து 350 விசைப்படகுகளுடன் கடலில் மீன்பிடிக்க சென்றிருந்த தமிழக மீனவர்கள் கச்சத்தீவு அருகே எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் யாழ்பாணம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய – மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசு சார்பில் வழங்கப்படும் கடனுதவிகள் குறித்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி பயனுள்ளதாக இருந்தது என்று பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - பயனாளி – 26 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மொரிஷியஸ் நாடாளுமன்றத் தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.

இன்று காலை 8.30 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, இரவு ஏழரை மணியுடன் நிறைவடைகிறது.

பிரதமர் திரு **Pravind Jugnauth** தலைமையிலான கூட்டணி குறைந்தபட்ச ஊதிய உயர்வு, ஓய்வூதிய உயர்வு, அத்தியாவசியப் பொருட்களுக்கான மதிப்புக்கூட்டுவரியை குறைப்பது உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளுடன் இந்த தேர்தலை சந்திப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இலவச போக்குவரத்து சேவை, இணையதள சேவைகள் மற்றும் எரிபொருட்களின் விலையை குறைப்பது உள்ளிட்ட வாக்குறுதிகளை முன்வைத்து எதிர்க்கட்சிகள் தேர்தலை சந்திப்பதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>

மாமன்னர் ராஜராஜசோழனின் ஆயிரத்து 39-ஆவது சதய விழா தஞ்சை பெரியகோவிலில் நேற்று தொடங்கியது.

இவ்விழாவையொட்டி, அவரது உருவச்சிலைக்கு தமிழக அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - நந்தகோபால் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழை காரணமாக, வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதனையடுத்து, பாசனத்திற்காக வினாடிக்கு மூவாயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 109 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

தொடர் மழை காரணமாக, அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் அளவு அதிகரிக்கக்கூடும் என்பதால், தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களை சேர்ந்த கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

தமிழகம், கேரளா, புதுச்சேரி மாநிலங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு தமிழகத்தின் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இமாச்சலப்பிரதேசம், வடமேற்கு பஞ்சாப் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தில்லி மற்றும் **NCR** பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு இரவு நேரங்களில் பனிப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**New South Wales** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் சாம்பியன் பட்டம் வென்றார்.

சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் ஹாங்காங்கின் **Helen Tang**-ஐ 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று பட்டத்தை கைப்பற்றினார்.

------------

ஆசிய சீனியர் ஜூடோ போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் ஏஞ்சல் யாதவும், ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Jatin**–னும், 73 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சௌரவும் வெண்கலப்பதக்கத்தை வென்றனர்.

-------------

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

நான்கு போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

-----------

சர்வதேச பேஸ்பால் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்தது.

துபாயில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை 1-0 என்ற செட் கணக்கில் இந்தியாவை வென்றது.

--------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் - மும்பை அணியையும், குஜராத் - ஹரியானா அணியையும் எதிர்கொள்கின்றன.

-----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒடிஷா — மோஹன் பஹான் அணியை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>